சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண் 220/2019

21.07.2025

வா.சா.1 திரு. ஷேக்அலாவுதீன், த/பெ.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான்அச்சுதமங்கலம் கிராமத்தில் வாடகைக்கு வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நாங்கள் குடியிருந்த வீட்டை இடித்த பின்னிட்டு அங்கு வசித்து வருகிறனே். அச்சுதமங்கலத்திற்கும், சேங்கனூரிற்கும் சுமார் 1 1/2 கிலோ மீட்டர் தூரமிருக்கும் 2018 முதல் அச்சுதமங்கலத்தில் வசிக்கிறேன் என்றால் ஆமாம். தற்போது 2021 ஆம் வருடத்திலிருந்து என் மகன் வீட்டில் சேங்கனூரில் வசித்து வருகிறேன். வழக்கு தாக்கல் செய்யும் போது நான் அச்சுதமங்கலத்தில் வசித்து வந்தததை சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த போது சேங்கனூரில் தான் வசித்தேன். 2018 ஆம் வருடத்திலேயே நான் அச்சுதமங்கலத்தில் வசித்து வருகிறேன் என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் 6 வருடங்களாக அச்சுதமங்கலத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. 2 1/2 வருடங்களாக தான் வசித்தேன். தாவா இடத்திற்கு மேற்கே உள்ள இடம் ஜாஹீர் உசேனுக்கு சொந்தமான இடம் என்றால் சரிதான். ஜாஹீர் உசேன் 1 ஆம் பிரதிவாதியிடமிருந்து 22.09.2016 ல் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். கிரய ஆவணம் பதிவு செய்த விவரம் தெரியும் என்றால் சரிதான். ஜாஹீர்உசேன் கிரய ஆவணத்தின் மூலம் பட்டா பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. ஜாஹீர் உசேன் வாங்கிய இடத்தில் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். சுவர் சம்பந்தமாக ஜமாத்தில் பேச்சுவார்த்தை நடந்தது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 14.07.2019 தேதியிட்ட ஒப்பந்தம் ஜமாத்தில் ஏற்பட்டது என்றாலும் அதிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது என்றாலும் சரிதான். ஜமாத்தில் பேசி முடிவெடுக்கப்பட்டு 14.07.2019 தேதியிட்ட ஒப்பந்தம் இது தான் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 ஆகும். ஒப்பந்தத்தில் கண்ட வாசகங்களுக்கு உட்பட்டு ஹாஜா அலாவுதினும், ஜாஹீர்உசேனும் நடக்கவில்லை என்பதால் தான் வழக்கு தாக்கல்

செய்துள்ளேன். இந்த விவரத்தை ஒப்பந்தத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் பெயர் கட்சி.நைனா ராவுத்தர் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் ஷேக் யூசுப் ஆகும். எனது தகப்பனாருக்கும் 1 ஆம் பிரதிவாதி தகப்பனாருக்கும் இடையே தாவா சொத்து சம்பந்தமாக திருவாரூர் உரிமையயில் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.2/1973 என்ற எண்ணில் வழக்கு நடைப்பெற்று சுவற்றில் ஆளுக்கு பாதி உரிமையுள்ளது என சமாதானமாக முடிக்கப்பட்டது. சமாதானப்படி எங்கள் இடத்திற்கு மேற்குபுறம் உள்ள சுவர் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அந்த சுவர் 150 வருடங்களாக உள்ளது. அந்த சுவர் செங்கல்லால் கட்டப்பட்டு மண்ணால் பூசப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சுவற்றிற்கு சிமெண்ட் கலவை பயன்படுத்தவில்லை என்றால் சரிதான்.

(பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.